உ

கணபதி துணை

நாச்சியார்புரம்

நாச்சியாரம்மன்

தோத்திரப் பதிகம்.

இஃது

தேவகோட்டை வன்றொண்டரவர்களின் மாணாக்கருளொருவரும்

நாச்சியார்புரம்

வெ. ரும. வெங்கடாசலஞ் செட்டியா ரவர்களின் குமாரருமாகிக்

கூத்தனூர் இராமய்யா வென்று வழங்குகிற

இராமநாதச் செட்டியா ரவர்களால்

இயற்றப்பெற்றது.

இராமநாதபுரம் ஜில்லா

நாச்சியார்புரம்

சு. ராம. நா. நாச்சியப்ப செட்டியார் பொருளுதவியால்

பினாங்கு கணேச அச்சு இயந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது.

1932.

உ

சிவமயம்.

நாச்சியார்புரம்

வ. கரு. மு. முத்தையா செட்டியாரவர்கள்

இயற்றிய

சாற்றுக்கவி.

இத்தலம்புகழு நாச்சி மாநகரிதனின் மேவும்
நத்தனுக் கினியாளான நாச்சியாரம்மன் மீது
வைத்தவாத ரத்தாப்பாக்கள் சுவைபெற வகுத்திட்டானால்
சுத்தவா னிராமநாதத் தொல்தமிழ்ப்புலமைத் தூயோன்.

37-2

உ

சிவமயம்.

நாச்சியார்புரம்

நாச்சியாரம்மன்பேரில்

ஆசிரிய விருத்தம்.

வெண்பா.

நத்தார் கையாற்கினிய நாச்சியா ரம்மையின்மேற்
பத்தாசிரியம் பகரவே எத்திசைக்கும்
போதக்கருணை பொழியுமெம தைங்கரத்தோன்
பாதமலர் சென்னியில் வைப்பாம்.

நூல்.

பூமேவு நான் முகப்புத்தேளு மிப்பெரும்
புவியளித்தருள் ஜெயுமாலும்
பொன்னுலகு மரசுபுரிமகபதியு மற்றுள்ள
புங்கவரெலாந்துதிக்கும்
தேமேவு கொன்றை முடி முக்கண்ணனொடு வாது
செய்து விளையாடுமுக்கட்
டேவியே யென்னுயிர்க்காவியே யன்பர்தொழு
தெய்வமே செய்யசுடரே
தூமேவு செய்ய முக்கனி பழுத்தினிமையொடு
சொரிகின்ற திவ்வியரசமே
தொண்டனா நாயினே னுக்கருள் புரிந்துன்
றுணைப்பத மளித்தாளுவாய்
நாமேவு துய்ய கலைமாது பொன் மாதெந்த
நாளுங் களித்துவளரு
நாச்சி நகராதிகாரி சூட்சியரு டருவீரி
நாச்சியமை கவுமாரியே. [1]

அம்புயப்போதை நிகரான திருவதனத்தி
னழகு மெய்ஞ்ஞான்று மொழியா
தானந்த மழை பொழிந்தருளு மிருவிழிகளு
மன்னத்தை யொத்த நடையும்
வம்பு செம்பதுமமுகை தும்பியின் கொம்புகுடம்
வரையெழில் கடந்திலங்கும்
வாரிட்ட கொங்கையுங் காரொத்த குழலுமிள
வல்லியை நிகர்த்த விடையும்
வெம்பி வந்தடைபவர்க்கருளபய வரதமும்
விழிகள் கழிகூற வந்தென்
மிடிதவிர்த் துன்னடிக்கடியர்க்கு ளொருவனாய்
மேவ வருள்செய்வதென்றோ
நம்பு மடியார்களுக்கின்ப மருள் அம்பிகா
நந்திவரை ராச குமரி
நாச்சி நகராதிகாரி சூட்சியரு டருவிரி
நாச்சியமை கவுமாரியே. [2]

பூரணி சதாநந்தி கங்காளி கவுமாரி
புனிதமுயர் நீலகண்டி
புரதகனி முக்கண்ணி திரிசூலி சாமுண்டி
புகலரிய கருணாகரி
காரணி யென்னனுகூலி மகமாயி மாதங்கி
கன்னி சுந்தரி குமாரி
கருதறிய சிற்சத்தியாதியிடை யந்தங்
கடந்த ஞானச்சொரூபி
தாரணியெல்லாந்தந்த சங்கரி வன் மகிட
சங்காரி சர்வலோக
தயாபரி விமலி பேரமலி யன்பர்க்கெளிய
தற்பரானந்தபோத
நாரணி நின்னு பயபரி புரப்பதும நா
ளுடவருள் செய்வதென்றோ
நாச்சி நகராதிகாரி சூட்சியரு டருவிரி
நாச்சியமை கவுமாரியே. [3]

அன்னைநீ தந்தைநீ அம்மைநீ யப்பநீ
யாதிநீ சோதி நீயே
யருவும்நீ யுருவும்நீ யானந்தவல்லிநீ
அன்பருக்கெளியவளும்நீ
யென்னுயிர்க்குயிருநீ யென்னை யாண்டவளுநீ
யேகபரவஸ்த்து நீயே
இங்குநீ அங்குநீ யெங்கு நிறைபொருளுநீ
எண்ணுதற்கரியவளும்நீ
பண்ணாரிய சதுர்வேத முதல்விநீ யுலகெலாம்
பாலித்த கன்னிநீயே
பாமரப் பதர்களுள் முதல்வனுமெனை யின்று
பாதுகாத்தருள் செய்குவாய்
நன்னய குணகரி [illegible] சேஸ்வரி
நாகராஜன் குமாரி
நாச்சி நகராதிகாரி சூச்சியருடருவிரி
நாச்சியமை கவுமாரியே. [4]

பாகு கற்கண்டுதேன் வானமுது சர்க்கரைகள்
பாலொத்த மதுர வசனம்
பாவையர் கண்மணியாவ படமொத்தவல்குலாம்
பௌவத்தமிழ்ந்தியெனது
சேகரந்தனிலுனது பாத தாமரை களைச்
சோாம லுனது புகழைச்
சிந்தித்திடாமல் வாணாளெலா வீணாய்ச்
செலுத்துவ துனக்கு முறையோ
போகமுரு முப்பெரும் பழமது வெலாமொழுகு
புதுமதுவெலாந்திரண்டு
போயகன் கழனியிற் பாயவே சென்னெல் முப்
போகம் விளைவாகுமின்னும்
காகாாசன் பிரமனாலளக்கற்கரிய
நற்பெரும் புகழ்படைத்த
நாச்சி நகராதிகாரி சூட்சியருடருவிரி
நாச்சியமை கவுமாரியே. [5]

தவமணுவிலாதவன் பஞ்சமா பாதகந்
தான்செயுங் கொடியபாவி
தருமமென்ன வென்பதைக் கனவினுங் கருதாத
சண்டாள னென்று சனனப்
பவவாரி நீந்தா நின்பக்தர் குழுவிற் சென்று
பணிசெயா மூடனிந்தப்
பாவியா மெனக்கு நின் கருணைவிழி நாட்டமது
பாலிக்கு நேரமிதுவே
கவனமயின் முதுகில் வரு குமரகுருபர விசா
கக்கடவுளுக்குமதமால்
கரிவதன வைங்கரக் கடவுட்கு மன்னையாங்
கன்னியே மன்னு புகழாய்
நவநிதிக்கோ னைத்த செல்வமிக வளநேழு
நகரவணிகேசர் சூழும்
நாச்சி நகரதிகாரி குட்சியரு டருவிரி
நாச்சியமை கவுமாரியே. [6]

தற்பரானந்த சிவசக்தி நான்முகப்பவந்
தனியியற்றிய பவத்தாற்
றரணியிலுதித்து மூவாசையங் கடலினுட்
டாழ்ந்துநில தடுமாறியே
அற்புதத்தொடு முனது பொற்பதப்பதுமமல
ரன்பொடு தினந்துதிக்கும்
அன்பரொடுகூடி நின்றன் புகழ்வழுத்திடா
தந்தோ கழித்துவிட்டேன்
மற்புயர்சலவரிய தென்றிசைச்சமன் வந்து
வன்பாசம் வீசி என்னை
வாதிக்கி லானென்ன செய்குவே னுய்யநல்
வரமளித்தாளவேண்டும்
நற்பரம்பொரொடு நடனமற்புதமதாய்ச் செய்த
நங்கையே கங்காளியே
நாச்சி நகரதிகாரி குட்சியரு டருவிரி
நாச்சியமை கவுமாரியே. [7]

பக்ஷமாய் நின்னடி விலக்ஷணம தெதிர்நின்று
பாராததென்ன கண்கள்
பண்புசெறி யன்பினெடு நித்தனின்புகழ்சொலிப்
பாடாததென்ன வாய்கள்
மச்சவிழியாய் நினது பொற்றழியை நித்தம்வலம்
வாராததென்ன கால்கள்
மாதங்கி திரிசூலி மகமாயி யென்றுன்னை
வணங்கிடாதென்ன கைகள்
கச்சணிதனத்து வெண்டாமரைக் கொடியுநாக்
கமலத்திலுரு வல்லியும்
கவரிகளிரட்டவரி யணைமீதி லரசுபுரி
கதிரொளி பரப்பு சுடரே
நச்சரவின்றுயில்செய் பச்சைமாலுக்கிளைய
நங்கையேகங்காளியே
நாச்சி நகராதிகாரி சூட்சியரு டருவீரி
நாச்சியமை கவுமாரியே. [8]

ஓதரிய பிரமர்முழக்கி மதுவாய்மடுத்
துண்டுகளி கூர்ந்துபாடு
மொப்பில் கமலாசனத்திருந்தே படைப்
புதவு சதுர்வேதனுக்குஞ்
சீதளத்தென்றலந்தேர ரசனஞ்சம்பு
செய்கின்ற துன்பினுக்குந்
தென்றிசைக்கடவுள் புரிவாதைக்கும் வானகத்
தேவரும் நடுங்குவார்கள்
ஆதலா லஞ்சிவந் துணையடைந்தே னென்னை
யாண்டருள்வ தென்றுபுகலா
யாலத்தை யுண்டதிரி சூலத்தபொடு பாதி
யாகத் தமர்ந்த கொடியே
நாதவடிவே நாலுவேத முடிவே யென்று
நம்பு மடியார்க ளுயிரே
நாச்சி நகராதிகாரி சூட்சியரு டருவீரி
நாச்சியமை கவுமாரியே. [9]

தேடரிய மறைமுதல்வி நீயென்று மறையெலாஞ்
செப்புவ தினைத்தெளிந்துன்
சேவடியை நம்பியே எழு நகர்வணிகராஞ்
செல்வர்களெலாந் திரண்டு
கூடிவந்தனதெல்லை தன்னி லொப்பரிய பொற்
கூட கோபுரமமைத்துக்
குடியிருந்தனதுபுகழ் மாறும லோதியே
கொண்டாடி வாழ்த்துகின்றார்
மாடேரு மீசரோடு வாதாடு மாதங்கி
மகமாயி நீ யவர்க்கு
மாறாத செல்வமுயர் மக்கள் சுயபந்தென்றும்
வாழ்வளித்தருள் செய்குவாய்
நாடியுயர் பாமாலை சூடு கவி வாணரை
நயந்தருள் புரிந்த தாயே
நாச்சி நகரதிகாரி குட்சியரு டருவிரி
நாச்சியம்மை கவுமாரியே. [10]

உ
சிவமயம்.

நாச்சியார்புரம் நாச்சியாரம்மன்பேரில் பதிநான்கு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

விநாயகர் துதி.

பைய்யரா விதழி யணிசடாமகுடப்
பகவன் முன்னருளியபாலன்
மெய்யடியாரி னுளத்திருந்தருளும்
விமலனிவ்வுல குளோரெவரு
முய்யமா மறையோர் சூழ்தருகம்ப
னூர்தனி லொப்பிலா தொளிரும்
ஐயனார்சேங்கைக் கரைவளர் கணேச
னடியிணைக் கன்பு செய்திடுவாம்.

நூல்.

மாமதி நிகர்க்கும் வதனபங்கயமும்
மைம்முகிலென்ன நெய்த்திருண்டு
வார்ந்த பூங்குழலும் வண்ணவாணுதலும்
வண்டினைப் பழித்த வாள்விழியும்
தேமலர் முருக்கின தாமுங் கனகச்
சிலையெனத் திரண்டு செம்மாந்து
சிறியநுன் மருங்குலினை வுறப்பருத்துத்
தெங்கிளங் குரும்பையைச் சிதைத்து
கோமகன் மகுடமுடி யெனக் குவிந்த
கொங்கையுங் கோலநீற்றன்பர்
குறைதவிர்த் தாட்கொண்டரு டிருவடியுங்
கொடியனேன் காணுநா ளுளதோ
நாமகளிட மீதாமெனப்பொலியும்
நாச்சிமா நகரில் வீற்றிருக்கும்
நறை மலர்க்கொடியே நிறைமடப்பிடியே
நலம்புரி நாச்சி நாயகியே. [1]

நெஞ்சினி லடக்கம் நிறைகுணம் பொறை நன்
னெறி யிலாக்கயவரைக் கூடி
நீற்றை யைந்தெழுத்தைப் போற்றுதன் மறந்து
நிணம்பயில் ரெட்டிலை யயிற்கட்
பஞ்சின் மெல்லடியார் படவரவல்குற்
படுகுழி வீழ்ந்தலமருமிப்
பாவியே னுய்யும்படிக்கு நின் கடைக்கட்
பார்வை தந்தருளுதி கொல்லோ
கஞ்சனை முனிந்த கடனிறவண்ணைக்
கண்ணனுக்கிளைய கற்பகமே
கங்கையா ரலம்பு நெடிய பொற்சடை முக்
கண்ணுதல் விரும்பு பூங்கரும்பே
நஞ்சினிற் கரிய வஞ்சன விழியாய்
நாச்சிமா நகரில் வீற்றிருக்கும்
நறைமலர்க் கொடியே நிறைமடப் பிடியே
நலம்புரி நாச்சி நாயகியே. [2]

ஊனமொன்றில்லா மானிடராக
வுற்பவித்திட லரிததனி
லூனமறவாது நினைதல் மிக்கரிதென்
றெப்பி நாலுரைத்திடு முண்மை
ஈனமிலரிஞ ருணர்த்துத னுணர்ந்து
மே மையேன் கனவினு நின்ற
னிணையடி துதிக்க வெண்ணிலே னெங்ங
னியம் பருங்கதி பெறற்கருள்வாய்
வானவர் பரவ வளர்திரி புரையே
வன்னியிற்றீ கனன்றம ராற்று
மகிடனை வதைத்து மணிமுடி வரையில்
மகிழ்வொடு நடிக்கு மாமயிலே
ஞான நாயகியே நான் மறைக்கொழுந்தே
நாச்சிமா நகரில் வீற்றிருக்கும்
நறைமலர்க் கொடியே நிறைமடப்பிடியே
நலம்புரி நாச்சி நாயகியே. [3]

இம்பரிலசர சரவுபி ரனைத்து
மீன்ற தாயாதலி னுய்தற்
கெண்ணி மற்றயன்மாலிமை யவர்புலி பாம்
பிருந்தவ முனிவரர் போற்றச்
செம்பொ னம்பலத்தி லெம்பிரா னன்பிற்
செயுநடங் கண்டு கண் களிக்குந்
தெய்வ நாயகியே திரி புராந்தகியே
திருவருள் சுரக்கு மம்பகியே
வம்பரோர்க்கிம்மை மறுமையின் பயனை
வழங்குதி வழங்கினையாகில்
வானமு மண்ணும் நின்பெரும்புகழே
வான்மதிக்கதி ரென நிலவும்
நம்பு மெய்யடியார்க்கின்ப வீடளித்து
நாச்சிமா நகரில் வீற்றிருக்கும்
நறை மலர்க்கொடியே நிறை மடப்பிடியே
நலம்புரி நாச்சி நாயகியே. [4]

மாதராசையினை வான்பொருள் விருப்பை
மண்ணின்மேல் வைத்த வாதரத்தை
மாற்றி நின்னம் பொன்மலரடி வணங்கி
வாழ்த்து மெய்த்தொண்டர் பேரவையிற்
பேதையேன் கலந்து பெறற் கரும்பேற்றைப்
பெறவருள் செய்திடா யென்னிற்
பித்தர்த முறவைப்பற்றி யானிந்நிலையைப்
பெருங்குழி வீழ்ந்தலைந்திடுவேன்
ஆதலாலென்னை யாள்வதுன்கட னிவ்
வண்டகோடிக ளெலாமாக்க
வயனையும்புரக்க வரியையும் மழிக்க
வரனையு மமைத்தமாமுக்க
ணுதனர்க்குரிய வேத நாயகியே
நாச்சிமா நகரில் வீற்றிருக்கும்
நறை மலர்க்கொடியே நிறை மடப்பிடியே
நலம்புரி நாச்சி நாயகியே. [5]

பாக சாதனனாய் நாக நாடாளப்
பணிப்பினும் பழ மறைக்கிழவன்
பதமளித்திடினும் பசுந்துழாய் முகில்வாழ்
பன்னக சயனம் வந்துறினும்
சாக ரஞ்சூழ்ந்த ராதல முழுதுந்
தனிக்குடை நிழற்றி வாழெனினும்
சற்றுமி யான் வேண்டேன் மற்றுநின் விருப்பென்
சாற்றெனிற் சதுர்மறை விளங்கும்
ஏக நாயகியே யிணையிலா ரமுதே
யிமைய வெற்பரை யன்மாமகளே
யெனத்துதி தொகுத்து நினைக்கு மெய்யன்பர்க்
கேவல்செய் திருந்திடப் பணிப்பாய்
நாகர்செய் தவத்தா யோகியர் பரவு
நாச்சிமா நகரில் வீற்றிருக்கும்
நறைமலர்க்கொடியே நிறைமடப் பிடியே
நலம்புரி நாச்சி நாயகியே. [6]

பாட்டணி துதைந்து பருமுகை யவிழ்க்கும்
பனிமலர்க்கரிய பூங்கோதைப்
பாவையா மதுரப் பவள வாயூறல்
பருகுதற் குருகுபாழ் நெஞ்சே
வாட்டமி லன்பர் மனத்துய ரகற்றி
வான்கதி பெற வருள் வழங்கும்
மங்கை நாயகி மாதங்கி கங்காளி
மலரடி வழுத்து வையாகில்
ஈட்டும் வல்வினையு மிறப்பொடு பிறப்பு
மிகந்து பேரின்ப வீடெய்தற்
கேதெனப் பலகா லோதினேன் சற்று
மிணங்கிலை யென் செய்கேனி மையார்
நாட்டமூன் றுடைய பேட்டிளங் குயிலே
நாச்சிமாநகரில் வீற்றிருக்கும்
நறைமலர்க்கொடியே நிறைமடப்பிடியே
நலம்புரி நாச்சி நாயகியே. [7]

வளியனல் புனல்வான் மண்ணெனப் பகுக்க
வரும்பெரும் பூதமோ ரைந்தில்
மலர்நிறை மணமாய் மணிவிடு சுடராய்
வாய்த்த சொல் லிடைப்படும் பொருளாய்
களிகொடு நிலவுங் கற்பகத்தருவே
கற்பவ ரற்பகத் தமருங்
கருணை நாயகியே தருண நான் மலர்ப்பூங்
கழலிணை கனவினுங் கருதா
வெளியனு மிவனென் றெனைவிடிற் பிறரிங்
கேன்று கொண்டருள்பவ ரிலையால்
ஈன்றதாய் சேய்பா லிரக்கம் வைத் தளித்த
லியற்கையா மற்றவர்க் கெளிதோ
நளிர் மலர்ப்பொழிலிற் களி மயிலகவு
நாச்சிமா நகரில் வீற்றிருக்கும்
நறை மலர்க்கொடியே நிறை மடப்பிடியே
நலம்புரி நாச்சி நாயகியே. [8]

உவரி சூழுலகத் துயிர்கண் மாட்டிரங்கு
மொழுக்கமும் பிறர்மனை யவரை
உற்றதா யெனக்கொ ளுறுதியும் பலநா
லோதுதற்குரிய பேருணர்வும்
தவமிகு மடியார் சங்கமுற் றிருக்கும்
தன்மையும் பரசிவ சமையச்
சார்பின ருறவும் தாழ்புறச் சமையச்
சழக்கர் பாலிகலு மெய்த்தொண்டர்
பவவலி கெடுத்துப் பரகதி கொடுக்கும்
பனிமலர்ப் பதம்பணி பரிசும்
பாவியேற் கெய்தும் படிக்கருள் புரிவாய்
பழமறை தொழும்பரா பரையே
நவமணிக்கொடி வானதிப் புனல் சுவற்றும்
நாச்சிமா நகரில் வீற்றிருக்கும்
நறை மலர்க்கொடியே நிறை மடப்பிடியே
நலம்புரி நாச்சி நாயகியே. [9]

கூற்றுவன் பாசசூலங் கைக் கொண்டு
கொடிய கிங்கார்களுஞ் சூழக்
கூட்டியே மகிட மிவர்ந்து வந் துயிரைக்
கொள்ளுநா ளுன் புகழ் கூறிப்
போற்றினு மோட்சங் கிட்டுமா லதற்குப்
போத வாசனை சிறிதில்லாப்
புன்மையேனுள்ள மாயையிற் சிக்கிப்
பொன்றுமே லுய்யுமா றெவனோ
நீற்றினிற் பஞ்சாக்க ரத்தினின் விருப்பும்
நின்னிரு மலரடி மறவா
நேயமும் அடியா ருறவு மெப்போதும்
நிலைபெறச் செய்வதுன் கடனுல்
நாற்றிசை துதிக்கும் பேற்றினை யுடையாய்
காச்சிமா நகரில் வீற்றிருக்கும்
நறை மலர்க்கொடியே நிறை மடப்பிடியே.
நலம்புரி காச்சி நாயகியே [10]

உ

சிவமயம்.

நாச்சியார்புரம்
காட்டு நாச்சியம்மன்பேரில்
பதினான்கு சீர்க்கழி நெடிலடி
ஆசிரிய விருத்தம்.

வெண்பா.

வானோர் புகழும் வனநாச்சி யம்மையின்மேற்
றானோர் பதிகமதைச் சாற்றுதற்கு மீனேக்கி
மாதகத்தி னின்பம் ஜெனிக்க வருமகவாம்
போதகத்தின் றாளே புகல்.

நூல்.

திருவளர் முளரி மலர்த்த விசிருக்குந்
திசைமுகன் சிருட்டி செய்திடவுஞ்
சிறையளி முரலும் பசுந்துழாய்ப் படலைச்
செங்கண்மால் திதி புரிந்திடவும்
மருவளரி தழி முடிப்புரிந்தகன் சம்
மரிக்கவும் பணித்தளப்பரு நான்
மறைமுதற் பொருளாய் விளங்கு மோங்கார
வாளரிப்பீடமேல் வைகுங்
குருவளர் மதியே கோதினன் நிதியே
குணங்குறி கடந்த சிற்பரையே
கொடியனேன் பவநோய் சிதைக்குமா மருந்தே
குளிர்மணி குயிற்றுமேன் மாடத்
துருவளர் துகிற் பொற்கொடிக ணின்றாடு
மொப்பில்சிறீ நாச்சிமா நகரில்
உறை பசும்பிடியே நிறை மலர்க்கொடியே
உயர்வன நாச்சி யொண் டொடியே. [1]

அலகிலானந்தத் திருநடந்தில்லை
யம்பலத்தின்புட னுடும்
அய்யனும் நீயும் அடிமையே னுள்ளத்
தமர்ந்தினி திருக்கும் நாளென்றோ
குலவியல் மதுரா புரியினிற் செழியர்
கோமகளாய்பற்றுமா மகத்தில்
கொங்கை மூன்றுடைய குமரியாய நச்செங்
கோல்கரங் கொண்ட பூங்குயிலே
மலரயன் முதலாய் வானவர் பலரும்
மறைகளு முணர்வதற்கரிய
வல்லியே வணங்கு மன்பருக் கெளிதாய்
வந்தரு ளளிக்கு மாமயிலே
உலகெலாம் பயந்த திலக வாணுதலாய்
ஒப்பில்சீர் நாச்சிமா நகரில்
உறை பசும்பிடியே நிறை மலர்க்கொடியே
உயர்வன நாச்சி யொண் டொடியே. [2]

கையுறு மனைவிட்ட யலிடைப்போய் நெய்க்
கடன்படுஞ் சிற் றறிவினர்போற்
கருதுமெய்த் தொண்டர்பவக் களை களைந்து
கரிப்பிலானந்த நீர் பாய்ச்சி
மெய்யுறு சிவயோகப் பயிரோங்க
வேண்டுநற் கருணை தந்தளிக்கும்
மேகமே நின்னை மறந்தனு தினமும்
மேதினிதனிற் பிறந் திறந்து
நையும் வானவரைப் பரமென மதித்து
நாடோறும் வந்தனை புரிந்து
நச்சிய பொருளி லற்பமு மடையா
நாயினுங் கடையனே னெவ்வா
றுய்யுமா றருள்வாயும் பருமுவக்கும்
ஒப்பில்சீர் நாச்சிமா நகரில்
உறை பசும்பிடியே நிறை மலர்க்கொடியே
யுயர்வன நாச்சி யொண் டொடியே. [3]

வாங்குநீர்க் கடல்சூழ் மாநில வரைப்பின்
மக்களுஞ் சுற்றமு மனையும்
மருவிய பெருநருளு மருகுவிட் டகலா
வாழ்வென மதித்துள மயங்கித்
தாங்குபே ரருளுக் கணிமையா மடியார்
சார்ந்த சற்சங்க முற்றவர்க
டம்பணி புரியா வம்பனே னுய்யுந்
தாமிலே னுயினுமில்லா
ரேங்குற தளிப்ப தீபவர்க்கிகா
மிரும்பொருள் படைத்தவர்க்கிதே
யியற்கை யன்றென நூலியம்புத லுணர்ந்திங்
கென்னை யாட்கொண் டருள் புரிவாய்
ஓங்குபைம் பொழிலிற் பூங்குயில் குலாவு
மொப்பில்சீர் நாச்சிமா நகரில்
உறை பசும்பிடியே நிறை மலர்க்கொடியே
யுயர்வன நாச்சி யொண் டொடியே. [4]

கழைநெடுஞ் சிலையில் விளைமதுச் செழும்பூங்
கணை துறந் தனங்கவேள் காயக்
காம மேற்கொண்டு வாமமே கலையார்
கண் வலைப்பட்டனு ரெய்தி
மழைமதக் கரிபேழ்வாய்ப் படு கரும்பாய்
மானமுங் குலமு மெய் வனப்பு
மாகி நன்மதியும் வாய்மையு மிழந்து
மயக்குறு மார்க்கமென் றருள்வாய்
குழையடர் தடங்கட் குமரியே யமரார்
குலப்பகை தவிர்த்திடக் குறித்துக்
கொற்றவாள வுணர்ச் செற்றிடுங் கருணைக்
குன்றமே மன்றினில் நடிக்கும்
உழைமழுக் கையற்குரிய நாயகியே
யொப்பில்சீர் நாச்சிமா நகரில்
உறை பசும்பிடியே நிறை மலர்க்கொடியே
யுயர்வன நாச்சி யொண் டொடியே. [5]

புரையிலா மனனும் புண்ணியப் நெறியும்
பொருண்மையுங் கல்வியும் புகழினின்
பொன்னடித்துணையே யென்னு நன் னினைவும்
புன்மையேற் கென் றருள் புரிவாய்
நரைவிடை யுடையான் வரைபடு புயத்தி
நளினமென் முலை முகைத் தழும்பும்
நகைமலர்க் காந்தள் கைவளைத் தழும்பும்
நண்ணுறற் கெண்ணி மாதவஞ் செய்
விரைபடு குழலாய் வெள்ளிமால் வரையில்
விண்ணுலாம் புண்ணியர் பரவ
விற்றிருந் தருள்கூர் வேற்றடங் கண்ணாய்
மெய்ப்புகழ் படைத்த சிற்பரையே
உறையுண றவிர்ந்த கரையிலா ரமுதே
யொப்பில்சீர் நாச்சிமா நகரில்
உறை பசும்பிடியே நிறை மலர்க்கொடியே
யுயர்வன நாச்சி யொண் டொடியே. [6]

வண்ணவான் மதியு மருவென விகழ்ந்து
வண்டுவிழ் வனச நாண்மலரின்
வரிவிழிக் குவளை மலர்கவின் றிகழும்
வதனமும் மழை நிகர் குழலும்
பண்ணியன் மொழியு மிந்திர தனுவைப்
பழித்த வொண்ணுதலு மந்தர நேர்ப்
பணைத்தடங் கோட்டுக் கொங்கையுஞ் செம்பொற்
பாதமும் படியிலா வடிவும்
கண்ணினுற் றமியேன் கண்டுகைதொழ வெங்
கடுஞ்சின மடங்கன் மேற்கொண்டு
காட்சி தந்தருள் வானுட்சிய ரெவருங்
காண்பதற் கரிய சற்பகமே
உண்ணுமா ரமுதே கண்ணனுக் கிளையா
யொப்பில்சீர் நாச்சிமா நகரில்
உறை பசும்பிடியே நிறை மலர்க்கொடியே
யுயர்வன நாச்சி யொண் டொடியே. [7]

சூதமே லயில் வேரெடுத் திருகூருய்த்
துணித்த பைந்தோகை வாகனனுந்
துணைத்தடங் கோட்டி லொன் றிறுத்தமர்செய்
தோன்முகத்த வுணனை மாய்த்து
மீதலத் தமரர்க் காருயி ரளித்து
விசைய மேற்கொண்ட வைங்கரனும்
விழைதரு மன்னுய் விடக்கள னிடப்பால்
விருப்புறு கரும்பி நன் மொழியே
பாதகமலப் பேறிருள் செகுத் தெனக்குன்
பாதகமல நிழ லளித்துப்
பருவரல் கெடுத்துக் கருவரல் தடுத்துப்
பாதுகாத் தருள் செய்பன் னூலு
மோதரும் பொருளே வேத நாயகியே
யொப்பில்சீர் நாச்சிமா நகரில்
உறை பசும்பிடியே நிறை மலர்க்கொடியே
யுயர்வன நாச்சி யொண் டொடியே. [8]

பிள்ளைவான் மதியினி லங்கெயி ரதுக்கிப்
பிறங்குவாய் முழைதிறந் தார்த்துப்
பெருங்கடல் வடவை யெனக்கனந் பொறிகள்
பிதிரிரு விழிகளுஞ் சிவக்கத்
தெள்ளிய நுதலிற் சிலை நுதலேறச்
சினங்கொளி இக்கவட் டடிக்கபவாய்த்
திருகுகோட் டொருமை யெருமை வாகனத்தை
திசைகளுஞ் செவிடுற நடாத்தித்
துள்ளிவந் தருகே தூதர்க ணெருங்கச்
சூலபாசங் கரங் கொண்டு
துடுக்கொடு கால னடுக்கவந் தென்னைத்
தொடருநா ளுன்றிரு நாமம்
உள்ளு நல்வரமே தந்தருள் புரிவா
யொப்பில்சீர் நாச்சிமா நகரில்
உறை பசும்பிடியே நிறை மலர்க்கொடியே
யுயர்வன நாச்சி யொண் டொடியே. [9]

பொன் பொதி கடுக்கை வேணி வானவனும்
புகழ்ந்துள மூவப்புறப் பொலிபொற்
பொதுவினில் நடிக்கு மதுமலர்க் குழலாய்
புன்மையே நன்மை சற்றேனு
முன்பிலாமையினு னின்ன மெப்பவத்து
முளைக்கினு முளைக்குக முக்கண்
மூர்த்தி பாதத்தி நீந்றி லஞ்செழுத்தில்
முதிரருள் விழிமணி யதனி
லின்புறு நினைவுஞ் சைவ நன்னெறியி
லிச்சையு மேனைய சமையத்
தினிலரு வருப்பு முனிவின் மெய்த்தொண்ட
ரிடத்தினி லிடைவிடா விருப்பு
முன்பதும் பரவு மன்பு நன்கருள்வாய்
யொப்பில்சீர் நாச்சிமா நகரில்
உறை பசும்பிடியே நிறை மலர்க்கொடியே
யுயர்வன நாச்சி யொண் டொடியே. [10]